செ.வெ.எண்: 94/2017 நாள்: 03.02.2017

**<u>கால்நடை பராமரிப்புதுறை</u>**

**<u>பத்திரிகை செய்தி வெளியீடு</u>**

**<u>2017-ம் ஆண்டுநடைபெற உள்ள இருவார கோழிக்கழிச்சல் நோய் தடுப்பு முகாம் 09.02.2017 முதல் 22.02.2017 வரை</u>**

கோழிக்கழிச்சல் பெருமளவில் கோழிகளில் இறப்பை ஏற்படுத்தும் நச்சுயிரியால் பரப்பப்படும் ஒரு கொடிய நோய் ஆகும். இந்நோய் ஒரு கோழியை தாக்கும்போது அது வேகமாக மற்ற கோழிகளுக்கும் பரவி மிகுந்த பொருளாதார இழப்பை ஏற்படுத்தும். இந்நோயைத் தடுப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் நடைபெறும் இருவார கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் இந்த வருடம் 09.02.2017 முதல் 22.02.2017 வரை நடத்தப்படவுள்ளது.

நமது மாவட்டத்திற்கு குறியீடாக 50,000 டோஸஸ் நிர்ணயம் செய்யப்பட்டு கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி மருந்து பெறப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் மேற்படி தடுப்பூசி மருந்து பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி முகாமினை கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஊழியர்கள் மூலம் குறிப்பிட்ட தேதிகளில் குறிப்பிட்ட கிராமங்களில் நடத்திட உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களது அருகாமையில் இயங்கி வரும் கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை நிலையங்களை அணுகி தங்களது கிராமத்தில் முகாம் நடைபெறும் நாளினை அறிந்து தாங்கள் வளர்க்கும் கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

**மண்டல இணை இயக்குநர்,**
**கால்நடை பராமரிப்புத்துறை,**
**கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்,**
**நாகர்கோவில்.**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.